கொண்டிருக்கிறபோது, நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள். அவர்களுக்குச் சாதகமாக உத்தரவைப் பெற்று, விவசாயிகளுடைய நெல், இதர வசூல்களை கோர்டுக்குக் கொண்டுபோய் விடுகிறார்கள் அதனால் அவர்கள் வாங்கிய கடனையும் கொடுக்க முடியாமல், குடும்பச் செலவுக்கும் வழியின்றி கஷ்டப்படுகிறார்கள் இந்தக் கொடுமையை ஒழிப்பதற்கு உடனடியாக ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து சாகுபடியாளர்களுக்குச் சரியான பாதுகாப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் நோடிபிகேஷன் செய்து, இனும் ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற தவறுகள் அதிலே வராது. அரசாங்கமே வசூல் செய்யும். நிலச் சொந்தக்காரர்கள் வசூலிக்க முடியாது. இப்போது ஏற்பட்டுள்ளது இடைக்காலத்தில் ஸ்டே வாங்கிவிட்டு, 65 முதல் 74-ம் ஆண்டு வரையில் ஸ்டே வாங்கிவிட்டு, கொடுமைப்படுத்துகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அதற்குச் சட்டத்திலே ஓட்டை இருக்கிறது. அந்த ஓட்டையை அடைப்பதற்குப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். விரைவிலே திருத்தச் சட்டம் கொண்டுவரப்படும்.

Pine apple cultivation.

*676 *Q.*—THIRU R. R. MUNUSAMI : Will the **Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) the places where pineapples are grown in this State ; and

(*b*) the incentives offered to the Pineapple growers in this State during the calendar year 1972 ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :

(அ) கன்னியாகுமரி, மதுரை, சேலம், மாவட்டங்களில் அன்னாசி பயிராகிறது.

(இ) 1972-ஆம் ஆண்டு சலுகை வழங்கப்படவில்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்த பைனாப்பிள் பயிரிடும் திட்டத்தைத் தஞ்சை மாவட்டத்தில் செயல்படுத்தினால் அதிகம் உற்பத்தியாகும் என்பது உண்மையா ? அப்படியானால் அங்கே பயிரிட இத்திட்டம் ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தஞ்சை மாவட்டத்தைவிட தண்ணீர் வசதி குறைவாக உள்ள வேறு பல மாவட்டங்கள் பைனாப்பிள் பயிர் செய்ய ஏற்றதாகும் என்று கருதப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் யாராவது விவசாயிகள் பயிரிட முன்வந்தால் ஒரு ஏக்கருக்கு 300 ரூபாய் கடன் உதவி கொடுக்கப்படும்.

1974 மார்ச் 29]

டாக்டர் ச. மு. பழனியப்பன் : பைனாப்பிள் பயிரிடுவதற்குக் கொடுக்கின்ற சலுகைகள் மற்ற பழவகைகள் பயிரிடுபவர்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேறு எந்தப் பழத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று தெரியவில்லை. குறிப்பிட்ட ஒரு பழவகையைப் பற்றிக் கேட்டால் பதில் சொல்லலாம். வாழைப்பழத்தைப் பற்றி அவர்கள் கேட்பதாக இருந்தால், அதற்கு பாக்கேஜ் ஸ்கீம் என்று ஒன்று தென்னார்க்காடு, நெல்லை போன்ற மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பழத்தைப்பற்றிக் கேட்டால் அதற்கு என்னென்ன சலுகைகள் உண்டு என்பதைத் தெரிவிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பைனாப்பிள் ஒரு சத்துள்ள உணவு. வேலி ஓரங்களில் கூட இதைப் பயிரிடலாம் என்று சொல்கிறார்கள். இந்தப் பழ வகையைப் பயிரிடுவதற்கான ஊக்கத்தை அளிக்கின்ற வகையில் அவர்களுக்கு இன்செண்டிவ்ஸ் கொடுக்கப்படுமா ? ஊக்க போனஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இன்செண்டிவ்ஸ் கொடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. 1972-ம் ஆண்டில் இன்செண்டிவ்ஸ் கொடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள், இல்லை என்று சொன்னேன். இனிமேல் கொடுக்கப்படுமா என்று கேட்டிருந்தால் அதற்குப் பதில் சொல்லியிருப்பேன். பைனாப்பிள் பயிர் செய்வதாக இருந்தால் கன்றுகள் வழங்க ஏற்பாடுகள் செய்கிறோம். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 300 ரூபாய் கடனுதவி செய்கிறோம். பைனாப்பிள் பலன் தருவதற்கு 18 மாதங்கள் ஆகும். அதன்பின் 4 வருடங்கள் பலன் தரும். ஆகவே 18 மாதங்களுக்குப் பின் கடனை வசூல் செய்ய ஏற்பாடு செய்கிறோம்.

கல்லார் பழ ஆராய்ச்சி நிலையம்.

*677 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கல்லார் பழ ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்துதல் குறித்து, மேட்டுப்பாளையம் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து அண்மையில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :

(அ) ஆம்.

(இ) இக் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU ... TRUTH ALONE TRIUMPHS